# மனிதன் செய்கின்ற பாபங்களும் அவற்றிலிருந்து மீளுவதும்

முருகப்பெருமான் அழகன், பழந்தமிழ்க் கடவுள். அவன் தமிழகத்தின் மலையெல்லாம், நிலையாகக் குடி கொண்டிருப்பவன். "சேயோன் மேய மைவரை" எனும் தொல்காப்பியத் தொடர் அவன் குறிஞ்சிக் கடவுள் என்பதைக் குறிக்கிறது. முருகன் என்ற சொல்லுக்கு இளமை, அழகு, வளம், கடவுள் தன்மை என்ற பல பொருள்கள் உள்ளன. "பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத்து இளம்நலம் காட்டி" என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பாடுகிறார். அத்தகைய இறைவனை, கலியுகக் கந்தனை, கனவிலும் நினைவிலும் சிந்தித்து, மகிழ்ந்து, சத்திமுருகன் அருளில் திளைத்து, பக்திக்கடலில் மூழ்கி முத்தி பெற்றவர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள். ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் பாடி அருளிய பாடல்கள் அனைத்தும் தேனருவியாக, அமுத ஊற்றாக, அருள் பெட்டகமாக, இலக்கண இலக்கியச் சுவையுடன் கூடிய உவமை, உவமானத்துடன் முருகனின் அருட்கடலில் நீந்துவதில் இந்தக் கலியுகத்தில் சுவாமிகள் யாருக்கும் சளைத்தவரல்லர் என்றுதான் கூறவேண்டும்.

தமிழ்நாடு செய்த தவத்தின் காரணமாக பாம்பன் சுவாமிகள் நமக்குக் கிடைத்திட்ட ஒரு பெரிய ஆன்மிகப் பெரியார். அவர் எழுதிய "ஆனந்த முகில்" என்ற பாடல் முதல் மண்டலத்தில் 18 ஆம் பதிகமாக வருகிறது. இதில் 10 பாடல்கள் உள்ளன. இந்நூலின் மையக் கருத்து என்னைப் பொருத்த வரை எந்த மனிதனும் மனம், மொழி, உடல் ஆகிய மூன்றாலும் அறம் புரிய வேண்டும். மனத்தால் செய்கின்ற அறம் என்பது கடவுள் உணர்வும், நற்சிந்தனையும் ஆகும். மொழி செய்கின்ற அறம் ஆண்டவனுடைய திருநாமத்தைப் பாடுதல், யாவர்க்கும் துன்பம் தராத சொற்களைக் கூறுதல். உடலால் புரியும் அறம் ஆண்டவனை மலரால் தொழுதல், அடியார்க்குத் தொண்டு செய்தல், மற்றும் பிற உயிர்க்கு என்றும் நன்மை செய்தல் ஆகும். இப்பாடலில் உள்ள கருத்துகள் படிக்கும் போது உள்ளம் சிலிர்க்கிறது. பாம்பன் சுவாமிகள் உலகத்தில் உள்ள எல்லாப் பழிகளையும் தன் மேல் ஏற்று, தான் பழி செய்ததாகக் கருதிக் கொண்டு, முருகப் பெருமானிடம் அப்பிழைகளை மன்னித்தருள வேண்டும் என்று கோருவது மிகச் சிறப்பு. ஓர் ஈ, எறும்புக்குக் கூடத் தவறு இழைக்காதவர் பாம்பன் சுவாமிகள். ஒரு தங்கக்கட்டி, அந்தத் தங்கக் கட்டியை உருக்கி, வார்ப்படமெடுத்து, அழகான விதவிதமான ஆபரணங்களாக மனத்தைக் கவரும் வகையில் இப்பதிகத்திற்கு பேராசிரியர் டாக்டர் ப.இராமன் விளக்கம் அளித்துள்ளார். பட்டினத்தார் இரத்தினச் சுருக்கமாக –

"கல்லாப்பிழையும், கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

சுவாமிகள் அருளிய இந்தப் பாடல்களில் தமிழ் மொழியின் அருஞ்சொற்களும் வடமொழியின் தமிழாக்கச் சொற்களும் மிகுதியாகப் பரவியிருப்பதால் எந்தப் பாடலின் பொருளையும் எளிதில் உணர முடியாது. மனிதப் பிறவி கிடைத்தற்குரியது. இப்பிறப்பிலிருந்து தேவனாக ஒவ்வொருவரும் உயர்வதற்கு முயல வேண்டும். சுவாமிகள் இயற்றிய ஞானவாக்கியத்தில் ''இரையோடு இறைவனையும் தேடு" என்பறிருப்பதை நாம் நினைவு கொள்ளவேண்டும்.

இறைவனைத் தேடாமல் இரையை மட்டும் தேடும் விலங்கு வாழ்க்கை வாழ்ந்தால் பாவமே பெருகும். இப்படி வாழும் மனித விலங்குகள் எண்ணற்றோர் உள்ளனர். இவர்கள் "கடவுள் இல்லை. சொர்க்கம், நரகம் இல்லை. பாபம் புண்ணியம் இல்லை. பிறப்பு இறப்பு இயற்கையால் நடப்பது. படைக்கும் கடவுளோ காக்கும் கடவுளோ அழிக்கும் கடவுளோ அருளும் கடவுளோ இல்லை. எல்லாம் இயற்கையால் நடப்பது" என்று பேசித் தம் அறிவீனத்தை வெளிப்படுத்துவர். இவர்கள் பாபம் செய்வதற்கு அஞ்சுவதே இல்லை. இவர்களேயன்றி நல்லவர்களும் ஆசையினாலும், அறியாமையினாலும் பல பாபங்களைச் செய்வர். எவர் செய்யினும் பாபம் பாபமே. "இத்தகைய பாபங்களைத் திருத்திக் கடையனுக்கும் கதி மோட்சம் தம் கருணையினால் கந்தவேட் பரமன் அளித்தவருள்வார். இனியும் பாபம் செய்யாதீர்'' என்று உணர்த்தப் பெருங்கருணை கொண்ட சுவாமிகள் அதி இளமைப் பருவம் தொட்டு ஒரு பாபமும் செய்யாது செவ்வேட் பரமன் திருவடிகளையே சிந்தையில் நிறைத்து வாழ்ந்தும் இந்த ஆனந்த முகிலில் தாம் அநேக பாபங்களைச் செய்துவிட்டதாகவும் அவை தாம் அருளைப் பெறத் தடையாக உள்ளனவென்றும் உள்ளம் உடைந்து கண்ணீர் பெருக அழுது புலம்புகிறார்கள். அருளாளர்கள் உலகத்தார் செய்யும் பாபங்களைத் தம்மேல் ஏற்றிக் கூறிக் கொள்வது அவர்களைத் திருத்தவேயாகும். இத் திருப்பதிகத்தில் குறிப்பிடாத பாபங்கள் இல்லை. ஒவ்வொருவரும் ஏதேனும் ஒன்றோ அல்லது பலவோ இவற்றுள் செய்திருக்கக் கூடும். ஆகையால் இத்திருப்பதிகம் நம்மைத் திருத்தும் பதிகம் என்பதில் ஐயமில்லை. அன்பர்கள் இத்திருப்பதிகத்தைப் பலமுறை படித்தார்களேயானால் நிச்சயம் பாபச் செயல்களில் ஈடுபட முனையமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

# ஆனந்தமுகில்

அன்னங் கொடுத்தவர்கண் முன்னநோ கச்சொன்ன
        வனியாய மேவுணவிலே
ஆலமிட் டுக்கொலை புரிந்தபவ மோபெரிய
        வடிகளை மறந்தவகமோ
தன்னையே பெரிதென வறைந்தவதி பாவமோ
        சவைகளில் வழக்கோரமாச்
சாற்றிய வனீதமோ பொய்ச்சத்தி யஞ்செய்த
        தாழ்வோ வனேகவுயிரைத்
தின்றதுரி தங்களோ திவ்வியகுண தெய்வம்வாழ்
        சினகர மழித்தசெடியோ
திரிகண சுத்தமில் லாதுமா மந்த்ரஞ்
        செபித்தபிச கோவந்தெனை
முன்னேற வொட்டாம லாணைபுரி கின்றதே
        முருகவந் தருள்செயாயோ
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம் பொழிய
        மூடுமா னந்தமுகிலே. 1.

அண்டிவனவ ருக்கின்ன றந்தவ றோதுன்பி
        லாதரித் திட்டவர்களுக்
கல்லகண் டஞ்செய்த கொடுமையோ நின்னடிக
        ளடிவணங் காதவகமோ
சண்டாளர் தொடர்பினை விரும்பிய பிறந்தையோ
        சாலப்பொய் சொற்றபிசகோ
சந்திரஞ் சாலைக ளழித்தபா தகமோ
        சலத்திற் புணர்ந்தவறோ
பண்டாய மறைகளைப் பழிசொன்ன பாவமோ
        பகலிற் புணர்ந்த புகரோ
பதிவிரத மல்குமட மகளிரைக் காதலிற்
        படரும்வினை யோவந்தெனை
முண்டாள னாக்கிமுறி யடிமைகொள் கின்றதே
        முருகவந் தருள்செயாயோ
முத்தரோடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
        மூடுமா னந்தமுகிலே. 2

சித்தநிலை மாறினோர் பொருள்கொண்ட குற்றமோ
        தெய்வவிகழ் செய்தசெடியோ
சிசுவதை விருத்தியோ திருடிய கொழிப்போ
        சிவாகம மிகழ்ந்ததீதோ
சத்தியச் சைவர்ப் பழித்தபிழை யோபரம
        தன்மம்விற் றுண்டதவறோ
தன்சாக நஞ்சுண்ட தோடமோ சண்டாளர்
        சாதிவினை செய்தகோதோ
குத்திதரஞ் செய்வாரை மெச்சிய பிறந்தையோ
        கூலிகள் குறைத்த குறையோ
குத்திரஞ் செவாரை மெச்சிய பிறந்தையோ
        கூலிகள் குறைத்த குறையோ
கோபத்தை யேசதா நேசித்த பாவமோ
        குடிகேட னானபயனோ
முத்திநெறி கூடாம லெனைவளைக் கின்றதே
        முருகவந் தருள்செயாயோ
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
        மூடுமா னந்தமுகிலே. 3

வேதியரை சித்தித்த தவறோ விவேகரற
        வேட்கையை மறுத்தமறமோ
மெய்யன்பர் புரிவிழும நோன்புகட் கிடையூறு
        விளையவினை செய்தமிறையோ
சூதகப் பெண்களைத் தொட்டகுறை யோதெய்வ
        தூடணங் கேட்டபிசகோ
சொன்னசொற் றவறாது நடவாத தோடமோ
        சூதுவழி நின்றபலனோ
பாதகத் தொழின் மூல மாடகந் தேடியுள
        பாவமோ பாவியின்கைப்
பலியுண்ட பழுதோ சதாகால மாயெனைப்
        படர்துயர்க் கடலமிழ்த்தி
மூதறி வுதிக்காம லாணையிடு கின்றதே
        முருகவந் தருள்செயாயோ
முத்தரோடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
        மூடுமா னந்தமுகிலே. 4

படிகமுத வாலோபி யாகிவந் தோரகடு
        பற்றவைத் துண்டபவமோ
படர்கொடி மரஞ்செடிகள் வட்கலுற வெட்டிப்
        பலக்கே டிழைத்தபலனோ
மடிநமுவு மின்கண்மேன் மனம்வைத்த மறமோவுன்
        மாணடி மறந்தவடுவோ
மகத்தாய நிற்குமற் றொருதேவை யிணைசொன்ன
        வழுவோ பொருட்பெண்டுகள்
கடிதடங் காணியென வுள்ளிமனை வியைவிட்ட
        கன்மமோ கருணையற்ற
கதைகளுக் கேசெவி கொடுத்தகறை யோவெனைக்
        காமரோ டத்திருத்தி
முடிவில்கவ லைக்கலியின் மீதலைக் கின்றதே
        முருகவந் தருள்செயாயோ
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
        மூடுமா னந்தமுகிலே. 5

சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

கள்ளுண்டு தள்ளாடி நின்றமதி மோசமோ
        கஞ்சாவு மபினும்வெறியுங்
கைகண்ட கற்பமென வுண்டமதி கேடா
        கணக்கில்வஞ் சித்தகசடோ
பள்ளர்க ளெனத்தினம் வதஞ்செய்து புன்பிசித
        பக்ஷணம் பணியபவமோ
பக்ஷமது பாராட்டி வைத்தபிறர் சொத்தைமறு
        படியில்லை யென்றபழுதோ
உள்ளொன்றும் வெளியொன்று மாய்க்குத்தி ரம்பேசி
        யூதியம் விழைந்தகரிலோ
உன்னுடைய தளிகளி லசுத்தம் புரிந்தடிக
        ளுரைமீறி நின்றபிழையோ

முள்ளுமுள் ளாயெனை வடிக்கின்ற தேபரம
முருகவந் தருள்செயாயோ
முத்தரோடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே. 6

பிரியலர்க் கிரிபாய பிழையோ பிதாவன்னை
பெண்டமர் மனக்கொதிப்போ
பெரியபொரு ளெனுமுன்னை யிலையென்ற கலுடமோ
பேயடிமை யானபுரையோ
பரதார விச்சையின் பலனோ துணைத்துரோக
பாவமோ குருசாபமோ
பத்திநெறி யாளர்ப் பிழைத்தபிழை யோநீதி
பல்கவகி லத்தையாளும்
அரசன்மனை குருவண்ணன் மாதுலன் றேவிகளை
யணையவுன் னியதீமையோ
அந்தணர்க் கிடுவதா யுறுதிமொழி செய்தவா
றளியா வரிப்போவெனை
முரணாய துன்பினுழை வித்தலைக் கின்றதே
முருகவந் தருள்செயாயோ
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே. 7

நாவிதர்வண் ணார்கூலி நல்காத பீடையோ
நங்கையர்கள் கொங்கைகண்மேல்
நயங்க ளைச்செல்ல விட்டபிழை யோவிரத
நாளிற் பிணைந்ததீதோ
பாவலர்கள் சாபமோ பரமவுன் கோபமோ
பத்தர்கண் மனத்தாபமோ
பாலுண்டு புள்ளுவஞ் செய்தபழி யோதிவ்விய
பதிபூசை விட்டகுறையோ
கோவதை புரிந்தமா கொடுமையோ கன்றுகள்
குடிக்கின்ற பால்கறந்த
குற்றமோ விதவையைத் தொட்டவழு வோநல்ல
கொள்கைநிமி ராமலென்னை
மூவிழும மானகெபி யுட்டள்ளு கின்றதே
முருகவந் தருள்செயாயோ
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே. 8

புனிதர்நெஞ் சங்கலுழ வசைசொன்ன கலுடமோ
பொய்ந்நூ றெரித்த புரையோ
புருடர்மணி மங்கைகளை மித்திரபே தஞ்செய்த
புகரோ பணத்தவாவால்
அனியாய நெஞ்சமுற் றஃகஞ் சுருக்கிவிற்
றகவோகை கொண்டவகமோ
அரன்விண்டு முதலியோர் நிலயநீர் நிலைகளி
லசுத்தம திழைத்த மறமோ
சனிபோ லெனைத் தொட் டலைக்கின்ற தேநினது
தண்ணளியை யுள்கொணாமல்
தண்டமிழ்க் குறுமுனி பகீரத னிராகவன்
றண்டுமுனி வரன்வாசுகி
முனிவர்சுர ரெவ்வரு மிறைஞ்சுபது மச்சரண
முருகவந் தருள்செயாயோ
முத்தரோடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே. 9

சுத்தமா நல்லறிவு தோன்றாத பாதகன்
றுதைபோய் யுள்னேனென்னினுஞ்
சொல்லிறுதி யில்லாத பொல்லாத வஞ்சகன்
சூதக விநாசனெனினும்
பத்திநெறி பழகாத பாமரன் கொடுமையே
பண்ணுமுழு மட்டியெனினும்
பழிபாவம் யாவுமொன் றாகக் குழீ இயவொர்
பருவுரு வுளேனென்னினும்
எத்தனை சழக்கிங னிழைத்திருந் தானுநா
னின்னுமறி யாதுசெயினும்
எப்படியு மாதரித் திமிழரு ளிகைத்துநீ
யெனையாள லுன்பரங்காண்
முத்திமுத லேபுகழ் படித்தகோ னாடுமறை
முடிவான கர்த்தவியமே
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே. 10

1. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! அன்னம் இட்டவர்கள் முன்னே அவர் உள்ளம் துன்புறும்படி சொன்ன அநியாயமோ? உண்ணும் உணவிலே நஞ்சைக் கலந்து கொலை செய்த பாவமோ? பெரிய கடவுளை மறந்த செருக்கோ? தன்னையே பெரியவன் எனச் சொல்லித் திரிந்த பெரிய பாவமோ? நடுவர் மன்றத்தில் வழக்கில் ஒரு பக்கமாகச் சார்ந்து அநீதி கூறியதோ? பொய்யாகச் சத்தியம் செய்த தாழ்வோ? அனேக உயிர்களைத் தின்ற பாவங்களோ? மேலான குணமுடைய தெய்வங்கள் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களை அழித்த பாவமோ? மனம் மொழி மெய்களில் தூய்மையில்லாமல் மகாமந்திரத்தைச் செபித்த குற்றமோ? என்னை முன்னேற விடாமல் ஆட்சி செய்கின்றதே முருகா! வந்து அருள் செய்யமாட்டாயோ?



2. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! என்னை அண்டினவர்களுக்குத் துன்பம் தந்த குற்றமோ;என் துன்ப காலத்தில் என்னை ஆதரித்தவர்களுக்கு நான் துன்பம் செய்த கொடுமையோ; உன்னுடைய திருவடிகளை நம்பின அடியார்களை வணங்காத செருக்கோ; சண்டாளர் தொடர்பினை விரும்பிய தொடக்கமோ; மிகுதியாகப் பொய் சொன்ன குற்றமோ; சத்திரங்களையும் சாலைகளையும் அழித்த பாதகமோ; நீருக்குள் பெண் உறவு கொண்ட குறையோ; பத்தினித் தன்மை மிக்க இளமகளிரைக் காதல் செய்த தீவினையோ; வந்து என்னை தலையில்லா முண்டம்போல் ஆக்கி, விலைக்கு விற்கப்படும் அடிமைபோல் அடிமையாகக் கொள்கின்றதே! முருகப்பெருமானே! வந்து அருள்புரியமாட்டாயோ?

3. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! மனநிலை மாறினோர் (பித்தர்) பொருள்களைக் கவர்ந்த குற்றமோ; தெய்வத்தை நித்தித்த குற்றமோ; குழந்தையைக் கொன்ற பாவமோ; பிறர் பொருளைத் திருடிய குற்றமோ; சிவாகமங்களை இகழ்ந்து கூறிய தீமையோ; சத்தியத்தைப் போற்றும் சைவரைப் பழித்துக் கூறிய குற்றமோ? மேலான அறத்தை விற்றுண்ட தவறோ; தான் சாவதற்காக நஞ்சை உண்ட குற்றமோ; சண்டாளர் சாதி வினைகளைச் செய்த குற்றமோ; வஞ்சனை செய்வோரைப் புகழ்ந்த தொடக்கமோ; கூலிகளைக் குறைத்துக் கொடுத்த குறையோ; கோபத்தையே எப்போதும் விரும்பிய பாபமோ; குடிகேடன் ஆன பயன் தானோ; முத்திநெறியைச் சேராமல் எனை வளைக்கின்றதே! முருகப்பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

4. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! வேதம் அறிந்த அந்தணர்களைக் குறை கூறிய தவறோ; அறிஞர் தம் அறம் செயும் விருப்பத்தை மறுத்துப் பேசிய அதர்மமோ; மெய்யன்பர் செய்யும் சிறந்த விரதங்களுக்குத் துன்பம் விளையச் செயல்புரிந்த குற்றமோ; மாதவிலக்கு உள்ள பெண்களை உறவு கொண்ட பிழையோ; சொன்ன சொற்படி தவறாமல் நடக்காத குற்றமோ; வஞ்சனை வழியில் சென்ற பயனோ; குற்றமான தொழில்கள் மூலம் பொன் தேடியதால் உண்டான பாபமோ? பாவி கையிலிருந்து பிச்சை பெற்று உண்ட குற்றமோ; சதாகாலமாய் என்னைப் பரந்த துயரக்கடலில் அமிழ்த்தி முதுமையான அறிவு தோன்றாமல் ஆட்சி செய்கின்றதே முருகப்பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

5. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! பிச்சை உதவாத உலோபியாகிப் பிச்சை பெற வந்தோர் வயிறு பசித் தீப்பற்ற வைத்து உண்ட பாவமோ; படரும் கொடிகள், மரங்கள், செடிகள் ஆகியவை கேடு அடையும்படி வெட்டிப் பலன் தருவது கெடும்படிச் செய்ததன் பயனோ; சேலை நழுவ விட்டு மயக்கும் மாதரின் மேல் மனம் வைத்த அதர்மமோ; உனது மாட்சியுடைய திருவடியை மறந்த குற்றமோ; பெரிய பொருளாம் உனக்கு இன்னொரு கடவுளைச் சமம் என்று சொன்ன குற்றமோ; விலை மாதரின் பெரிய அல்குல் உரிமை என நினைத்து மனைவியைக் கைவிட்ட செயலோ; கருணையில்லாக் கதைகளுக்கே செவி கொடுத்த குற்றமோ; என்னை விருப்பம் என்னும் ஓடத்தில் இருத்தி, முடிவில்லாத கவலைக் கடலின் மீது வருத்துகின்றதே; முருகப்பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

6. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்த்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! கள்ளை உண்டு தள்ளாடி நின்ற அறிவுக்கேடோ; கஞ்சாவும், அபினும், மதுவும் ஆகியவற்றைக் கைகண்ட காயகல்பம் என்று நினைத்து உண்ட அறிவுக்கேடோ; நம்பினவர் கணக்கைப் பொய்யாக எழுதிக்காட்டி வஞ்சித்த குற்றமோ; புலையர்கள் எனத் தினம் உயிர்க்கொலை செய்து அற்பமான மாமிசத்தை உண்டதால் வந்த பாவமோ; அன்பு பாராட்டிப் பிறர் ஒப்படைத்த சொத்தை அவர் கேட்டபோது இல்லை என்று கூறிய குற்றமோ; மனத்துள் ஒன்றை நினைத்துக் கொண்டு வாயில் ஒன்றைப் பேசும் வஞ்சனையால் ஊதியம் ஈட்டிய குற்றமோ; உன்னுடைய திருக்கோயில்களில் அசுத்தம் செய்து, அடியார்களின் உரையை மீறி நடந்துகொண்ட குற்றமோ; முள்ளு முள்ளாய் என்னைக் குத்துகின்றதே பரம முருகனே! வந்து அருள் புரியமாட்டாயோ?

7. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! நண்பர்க்கு பகைவனான குற்றமோ; தாய், தந்தை, மனைவி, சுற்றத்தார் என்மீது கொண்ட மனக் கொதிப்போ; பெரிய பொருளான (பிரம்மம்) உன்னை அதுபோன்று இல்லை என்று கூறிய பாபமோ; பேய்க்கு நான் அடிமையான குற்றமோ; பிறன் மனைவியை விரும்பிய பலனோ; என்னைத் துணையாக நம்பினவர்க்குத் துரோகம் செய்த பாவமோ; குரு இட்ட சாபமோ; பக்தி வழியில் செல்லும் பக்தர்களுக்குக் குற்றம் செய்த குற்றமோ; என்னை வலிமையான துன்பத்தில் அரசன், மனைவி, குரு, அண்ணன் மாமன் முதலானோர் தம் பத்தினிமார்களைத் தழுவக் கருதிய தீமையோ, அந்தணர்க்கு ஈவதாக உறுதிமொழி செய்தபடி அளியாத குற்றமோ? நுழையச் செய்து வருத்துகின்றதே! முருகப் பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

8. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! அம்பட்டன், வண்ணான் ஆகியோர் கூலியைக் கொடுக்காத பீடையோ, பெண்களின் தனங்களில் கண் பார்வையைச் செலுத்திய பிழையோ; விரத நாள்களில் மாதரைத் தழுவிய தீமையோ; புலவர்களின் சாபமோ; பூசையைச் செய்யாதுவிட்ட குறையோ; பசுக் கொலை செய்த பெருங்குற்றமோ; கன்றுகள் குடிக்கின்ற பாலைக் கறந்த குற்றமோ; விதவையைப் புணர்ந்த குற்றமோ; நல்ல கொள்கை வளராமல் என்னை மூவகைத் துன்பங்களான குழியில் தள்ளுகின்றதே! முருகப் பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

9. முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்த்தைப் பொழிதற்கு வானை மறைக்கும் ஆனந்த மேகமே! புண்ணியர் நெஞ்சம் கலங்க இழிவாகப் பேசிய குற்றமோ; பொய் நூலைக் கூறிய குற்றமோ; மணமகன், மணமகள் ஆகியோரைப் புறம் கூறி நட்பைக் கெடுத்த குற்றமோ; பணத்தாசையால் அநியாயமான எண்ணம் கொண்டு தானியங்களின் அளவைச் சுருக்கியும் விலையைக் கூட்டியும் விற்று மனத்தில் மகிழ்ச்சி கொண்ட செருக்கோ; சிவபெருமான், விஷ்ணு ஆகியோரின் திருக்கோயில்களில் உள்ள தீர்த்தங்களில் அசுத்தம் செய் அதர்மமோ; உனது குளிர்ந்த திருவருளை நினைக்க

# நவராத்திரி நாளில் முழு உருவ அலங்காரம் காட்டும் அதிசய அம்பாள்

அம்பாள் பெயர் : ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி. சிறப்புப் பெயர் ஸ்ரீ கரு காத்த அம்மன். சுவாமிபெயர் ஸ்ரீ அகத்தீசுவரர். மிகவும் பழமையான கோயில். 4 காலபூஜை ஐதீகப்படி அம்பாள் தரிசனம் முகம் மட்டும் சாதாரண நாளில். சிறப்புதரிசனமாக நவராத்திரி நாளில் 9 நாள்கள் மட்டும் அம்பாளை முழு அலங்கார தரிசனம் காணலாம். அம்பாள் சுயம்பு மூர்த்தம். புற்றுமண்ணால் தானாகவே அம்பாளாக ஆவிர்பவித்து, தினமும் 4 காலை பூஜை நடைபெறுகிறது.

**சந்நிதி சிறப்பு :**

குழந்தைப் பேறுகிட்டும். திருமணத் தடை நிவர்த்தி நோய் நிவர்த்தி ஆகியன கிட்டும். அம்பாள் தரிசனம் கொடுப்பினை உள்ளவர்களுக்கு மட்டுமே கிட்டும். புலவர் கு. நடராசபிள்ளை எழுதிய 16 பாடல்களை பக்தர்கள் படிக்கிறார்கள்.

**இருப்பிடம் :**

கும்பகோணம், வலங்கைமான் பஸ்தடம் மருதா நல்லூரில் இறங்க வேண்டும். கிழக்கே ஒரு கிலோ மீட்டரில் கரு வளர்சேரி. மருதாநல்லூரில் ஆட்டோ வசதி உண்டு. வாசலில் பழனிஆண்டவர், பிராகாரத்தில் வள்ளி தெய்வானை சுப்பிரமணியர் சந்நிதி உண்டு. அடிக்கடி முருகனுக்கு சிறப்பு பூசைகள் உண்டு. கோயில் போன் 0435 -2000538.

**- கலாநிதி,** பாபநாசம்

முடியாமல் சனிபோல் என்னைப் பிடித்து வருத்துகின்றதே! தண்டமிழ் அகத்திய முனிவர், பகீரதன், இராகவன், வீணையுடைய முனிவரான நாரதர், வாசுகி எனும் அரவம், முனிவர், தேவர் எத்தகையரும் வணங்கும் தாமரைத் திருவடிகளுடையவனே! முருகப் பெருமானே! வந்து அருள் புரியமாட்டாயோ?

10. முத்தியளிக்கும் முதற்பொருளே! திருப்புகழ் பாடியருளிய அரசனான அருணகிரிநாதர் விரும்பும் வேதங்களின் முடிவான கருத்தனே! முத்தர்களுடன் சித்தர்களும் பருகும்படி அமிர்தத்தைப் பொழிதற்கு வானை மறைத்தெழும் ஆனந்த மேகமே! சிறிதுகூட நல்ல அறிவு தோன்றாத பொல்லாதவன்; மிகுதியான பொய் உடையவன் என்றாலும் சொற்படி நடக்காத பொல்லாத வஞ்சகன்; பிறப்பை நாசம் செய்பவன் என்றாலும் பத்தி நெறியைப் பழகாத அறிவிலி; கொடுமையே செய்யும் முழுமூடன் என்றாலும், பழியும் பாவமும் ஒன்றாகக் கூடிய ஒரு தூல உடம்புள்ளவன் என்றாலும், எத்தனை குற்றங்கள் இப்படிச் செய்திருந்தாலும், நான் இன்னும் அறியாமையினால் செய்தாலும், எப்படியாவது ஆதரித்து இனிய திருவருளை அளித்தருளி நீ என்னை அடிமை கொள்ளுதல் உன் செயலாகும்!

முருகன் அடியார்கள் இந்தப் பாடலை விரும்பிப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் எங்களுடைய வலைத்தளத்தில் www.pamabanswamigal.org உள்ள இனிய வாழ்விற்கு வழி என்ற தலைப்பில் வரிசை எண் 71ல் சென்றால் டாக்டர் ப. இராமன் அவர்கள் ( கற்றுக் கொள்வதற்காகவும், வழிகாட்டுதல் பேரிலும்) பிரித்துக் கொடுத்துள்ளதை இங்கே தந்துள்ளேன் அடியேன் செய்த சுவாமிகளுக்காகவும், ஆன்மிகத்திற்கும் செய்த அணுவினுக்கும் மிகச் சிறிய தொண்டேயாகும்.



# ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**